பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

23 10 2025 THURSDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நான்கு நாள் பயணமாக கேரளா சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

2. பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்ட தேர்தல் நடைபெறும் 122 தொகுதிகளில், வேட்பு மனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாள் ஆகும்.

3. சத் பண்டிகையை முன்னிட்டு ஆயிரத்து 500 சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

4. யுக்ரைன் மீது, ரஷ்யா நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர்.

5. பிரெஞ்ச் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒன்றையர் பிரிவில் இந்தியாவின் உன்னத்தி கூடா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, கேரளாவில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

நான்கு நாள் பயணமாக அம்மாநிலத்திற்கு சென்றுள்ள அவர், மூன்றாவது நாளான இன்று, திருவனந்தபுரத்தில் உள்ள ஆளுநர் மாளிகை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணனின் சிலையை திறந்து வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து, வர்கலாவில் உள்ள சிவகிரி மடத்தில் நடைபெறும் ஸ்ரீநாராயண குரு நூற்றாண்டு விழாவில் அவர் பங்கேற்கிறார்.

பிற்பகலில் கோட்டயம் மாவட்டம், பலா நகரில் உள்ள தனியார் கல்லூரி பவள விழா கொண்டாட்டத்திலும் திருமதி. திரௌதி முர்மு கலந்து கொள்கிறார்.

>>>>><<<<<

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மூன்று நாள் பயணமாக இன்று ராஜஸ்தான் மாநிலம், ஜெய்சால்மர் செல்கிறார்.

அங்கு இன்று நடைபெறும் ராணுவ கமாண்டர்கள் மாநாட்டில் அவர் கலந்து கொள்கிறார்.

ராணுவ தலைமைத் தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி மற்றும் மேற்கு பிராந்திய ராணுவ உயரதிகாரிகள் பங்கேற்கும் இந்த மாநாட்டில், எல்லைப் பாதுகாப்பு நிலவரம், நவீன போர்முறைகள் மற்றும் பாதுகாப்பு துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

நாளை லோங்கேவாலா எல்லைச்சாவடிக்கு செல்லும் திரு. ராஜ்நாத் சிங், இந்தியா – பாகிஸ்தான் போரில் உயிர்நீத்த வீரர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துகிறார்.

அதனைத் தொடர்ந்து ராணுவ அருங்காட்சியகத்தை பார்வையிடும் அமைச்சர், ராணுவத்தின் வீர தீர செயல்பாடு மற்றும் போர் வெற்றிகளை சித்தரிக்கும் ஒலி – ஒளி காட்சியையும் தொடங்கி வைக்கிறார்.

>>>>><<<<<

வறுமை ஒழிப்பு மற்றும் கட்டமைப்பு வசதி மேம்பாட்டில், அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாக, மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

ஜெனீவாவில், வர்த்தகம் மற்றும் வளர்ச்சி குறித்த ஐ.நா. மாநாட்டில் உரையாற்றிய அவர், நீடித்த வளர்ச்சி மற்றும் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில், நாட்டின் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துரைத்தார்.

டிஜிட்டல் அதிகாரமளித்தலில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தை சுட்டிக்காட்டிய அவர், சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களிடையே வளர்ச்சியை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

கடந்த மூன்றாண்டுகளாக 7 சதவீத வருடாந்திர வளர்ச்சியுடன், வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திரு.பியூஷ் கோயல் தெரிவித்தார்

>>>>><<<<<

பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் நடைபெறும் 122 தொகுதிகளில், வேட்பு மனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாள் ஆகும்.

இத்தொகுதிகளில், அடுத்த மாதம் 11-ந் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்நிலையில், Mohania தனித் தொகுதியில், ராஷ்ட்ரீய ஜனதா தள வேட்பாளரின் ஷெட்யூல்டு வகுப்பினருக்கான ஜாதிச் சான்றிதழ், செல்லத்தக்கதாக இல்லை என்று கூறி, அவரது வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

இதேபோன்று, வால்மீகிநகர் தொகுதியில் ஜன் சுராஜ் கட்சி வேட்பாளர், வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்பாக, தமது அரசுப் பதவியை ராஜினாமா செய்யாததால், அவரது மனுவும் நிராகரிக்கப்பட்தாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, ஜார்க்கண்ட், ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவைக்கு இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிகளில், வேட்புமனு பரிசீலனை நேற்று நிறைவடைந்தது. இத்தொகுதிகளில், மனுக்களை திரும்பப் பெற நாளை கடைசி நாள் ஆகும்.

>>>>><<<<<

தேசிய நெடுஞ்சாலைகளின் நிலை பற்றிய தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு பணியை மேற்கொள்ள இருப்பதாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

23 மாநிலங்களுக்குட்பட்ட சுமார் 21 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கான தேசிய நெடுஞ்சாலையில், கட்டமைப்பு ஆய்வு வாகனங்கள் மூலம், இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

சாலை அமைக்கும் இயந்திரங்கள் மற்றும் சாலையில் ஏற்பட்டுள்ள விரிசல்கள், குண்டு-குழிகள் மற்றும் நடைபாதையின் நிலை குறித்த தகவல்கள், இந்த ஆய்வின்போது சேகரிக்கப்படும். முப்பரிமான லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வின் மூலம், மனித தலையீடின்றி, சாலைப் பழுதுகள் கண்டறியப்பட்டு, தேசிய நெடுஞ்சாலை ஆணைய நிபுனர் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சாலைப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது

>>>>><<<<<

சத் பண்டிகையை முன்னிட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு ஆயிரத்து 500 சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

ஒரு நாளைக்கு 300 ரயில்கள் வீதம் 5 நாட்களுக்கு இந்த சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

இதனிடையே, சத் பண்டிகையை முன்னிட்டு, கோவை போத்தனூரிலிருந்து பீகார் மாநிலம், Barauni-க்கு நாளை இரவு 8 மணிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

மறுமார்க்கத்தில் Barauni-யிலிருந்து இந்த ரயில், 27ஆம் தேதி புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>><<<<<

மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தூய்மை இயக்கத்தின் மூலம், 500-க்கும் அதிகமான கோப்புகள் மற்றும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு, 192 கோப்புகள் அழிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்வுத் துறையின் வாயிலாக இம்மாதம் இரண்டாம் தேதி முதல் இந்த நாடுதழுவிய சிறப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம், மின்னணு கழிவுகள் உட்பட, தேவையற்ற கழிவுகள் அகற்றப்பட்டதன் வாயிலாக, 33 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டிருப்பதுடன், சுமார் 8ஆயிரத்து 750 சதுர அடி இடம், பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், புவி அறிவியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வங்கி முறைகேடு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள தொழிலதிபர் மெகுல் சோக்ஷியை, நாடுகடத்த பெல்ஜியம் நாட்டின் Antwerp நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

பஞ்சாப் நேஷனல் வங்கியில், சுமார் 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளவிற்கு கடன்பெற்று முறைகேடு செய்தது தொடர்பான வழக்கில், தலைமறைவாக இருந்த மெகுல் சோக்ஷி, பெல்ஜியம் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டது சரி என்றும் அந்த நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆண்டிகுவா நாட்டில் இருந்து, தம்மை பெல்ஜியத்திற்கு கடத்தி வந்திருப்பதாகவும், இந்தியாவிற்கு அனுப்பப்பட்டால், அரசியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடும் என்று, மெகுல்

சோக்ஷி தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தையும், பெல்ஜியம் நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது

>>>>><<<<<

குஜராத்தில், தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலர் உயிரிழந்தது தொடர்பாக, அம்மாநில அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறைத் தலைவருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மாற்றுத் திறனாளியான அந்த நபர், கடந்த 12ந் தேதி குஜராத்தின் Tharad மாவட்டத்தில் உள்ள அவரது வீட்டருகே கடத்தப்பட்டு, 14ந் தேதி கால்வாய் ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டது குறித்து, இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு, அந்த நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, ஊடகங்களில் வெளியான செய்தியின் அடிப்படையில், தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

>>>>><<<<<

சுகாதாரத் துறையில், நோய் கட்டுப்பாடு மற்றும் மருத்துவ கண்காணிப்பு தொடர்பான 3 புதிய சேவைகளை மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திருமதி. புன்யா சலீலா ஸ்ரீவஸ்தவா நேற்று தொடங்கி வைத்தார்.

மருத்துவக் கண்காணிப்பு, மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய நிலை மற்றும் ரசாயன அவசர காலங்களில் மருத்துவ மேலாண்மைக்காக இந்த புதிய சேவைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்புடன் இணைந்து, தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் கூட்டாக இதனை உருவாக்கியுள்ளன.

>>>>><<<<<

யுக்ரைன் மீது, ரஷ்யா நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர்.

யுக்ரைனில் உள்ள எட்டு நகரங்களை குறிவைத்து இந்த தொடர் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ரஷ்யாவின் ப்ரயான்ஸ்க் பகுதியில் உள்ள ரசாயன ஆலை மீது யுக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது.

யுக்ரைனுக்கு எதிரான நடவடிக்கையில், ரஷ்யா பயன்படுத்தும் பெரும்பாலான வெடிபொருட்கள் இந்த ஆலையில் தயாரிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

பிரெஞ்ச் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் உன்னத்தி கூடா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர், மலேசியாவின் Letshanaa கருப்பத்தேவனை 11-21, 21-13, 21-16 என்ற செட்கணக்கில் வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் கவிப்பிரியா செல்வம் - சிம்ரன் சிங்கி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – அமெரிக்காவின் Ben Shelton இணை காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

Besel-ல் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் இந்த இணை, மொனாக்கோவின் Hugo Nys – பிரான்ஸின் Edouard Roger Vasselin இணையை 7-6, 6-7, 10-1 என்ற செட்கணக்கில் வென்றது.

>>>>><<<<<

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி, அடிலெய்டில் இன்று நடைபெறுகிறது. இப்போட்டி காலை 9 மணிக்கு தொடங்கும்.

>>>>>END<<<<<